Deposition of witness

(Chapter XXIII code of Criminal Procedure)

In the court of Judicial Magistrate No.II,Tindivanam.

CASE NO.STC. 336/2024

Prosecution witness – DW – 2

| | | | |
|---|---|---|---|
| Date | 11.03.2026 | Calling | |
| Name | காளிதாஸ் | Religion | |
| Father/Husband Name | சுப்ரமணி | Age | 48 |
| Village/City | சென்னை | Caste. | |

Accused present.

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்பொழுது கண்டக்டராக பணி செய்து வருகிறேன். 26.04.2024 அன்று நான் எனது மனைவி மற்றும் மகன் ஆகியோர் எனது அக்கா மகன் திருமணத்திற்காக சூனாம்பேட்டிற்கு வந்தோம். அப்பொழுது எனது மனைவிக்கு அவருடைய தம்பி முருகதாஸ் தொலைபேசியில் இருந்து அழைப்பு வந்தது. அந்த அழைப்பை எடுத்தவுடன் முன்னூரை சேர்ந்த காத்தவராயன் எனது மனைவியை அசிங்கமான வார்த்தைகளால் திட்டி உடனே வேப்பேரிக்கு வரும்படி சொன்னார். அப்பொழுது சிறிது நேரம் கழித்து முருகதாஸ் உடைய மனைவி நிர்மலா எனது மனைவிக்கு போன் செய்து கொலை செய்து விடுவதாக மிரட்டுகிறார்கள் என்றும் உடனடியாக வரும்படியும் சொன்னார். உடனே எனது மனைவி வேப்பேரிக்கு சென்றார். அப்பொழுது அங்கிருந்த காத்தவராயன் பெரிய கருங்கல்லை எடுத்து எனது மனைவியை கொலை செய்ய சென்றார். எனது பக்கத்து வீட்டில் இருக்கும் முத்துலிங்கம் என்பவர் அதை தடுத்துவிட்டார் என்றால் எனது மனைவியை கொலை செய்திருப்பார்.

2. அதற்குப் பிறகு எனது மனைவியிடம் எனது பணத்தை கொடு என்று மிரட்டினார். ஏழுமலை என்பவர் மகன் ரகு என்பவர் சொன்னதன் அடிப்படையில் எனது மனைவி மற்றும் முருகதாஸ் சென்னை கீழ்பாக்கத்தில் இயங்கும் ஹிஜாவு ( HIJAU) என்ற நிதி நிறுவனத்தில் ரூபாய் ஒரு லட்சம் செலுத்தினால் மாதம் ரூபாய்.15,000/– வட்டி கிடைக்கும் என்று சொன்னதன் அடிப்படையில் எனது மனைவியும் முருகதாஸும் முதலீடு செய்து பணம் பெற்று வந்தார்கள். முருகதாஸ், ஷங்கர் மற்றும் காத்தவராயனிடம் அந்த நிறுவனத்தில் முதலீடு செய்தால் வட்டி கிடைக்கும் என்று சொன்னதன் அடிப்படையில் முருகதாஸ் மூலமாக ஷங்கர் மற்றும் காத்தவராயன் அந்த நிறுவனத்தில் முதலீடு செய்து வட்டி பெற்று வந்தார்கள். திடீரென்று 03.11.2022–ம் தேதி நிறுவனத்தின் உரிமையாளர்கள் மக்கள் பணத்தை எடுத்துக்கொண்டு வெளிநாட்டிற்கு தப்பி சென்றதாக செய்தி வந்தது. அந்த பணத்தைக் கேட்டு தான் காத்தவராயன் மற்றும் சங்கர் எனது மச்சான் முருகதாஸை பிடித்துக் கொண்டு பணம் கொடுக்கவில்லை என்றால் விடமாட்டேன் என்று மிரட்டினார்கள். காத்தவராயன் மற்றும் சங்கர் முதலீடு செய்த பணத்திற்கும் எனது மனைவிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை.

3. சங்கர், காத்தவராயன், அரசு ஆகியோர்களுக்கு நில புரோக்கராக இருந்து எனது மனைவி 4 ஏக்கர் 83 சென்ட் நிலம் வாங்கிக் கொடுத்தார். அதற்கு புரோக்கர் கமிஷனாக ஆக ரூபாய்.5,80,000/– வாங்கியுள்ளார். பத்திரப்பதிவு செய்ததற்கு பின்னிட்டு நான் நிலத்திற்கு சென்று பார்த்த பொழுது அந்த நிலம் ஆக்கிரமிப்பில் இருந்தது. நிலத்தை விற்பனை செய்த ரவிசங்கருக்கு விற்பனை செய்த நபர்கள் நிலத்தை ஆக்கிரமிப்பு செய்து வைத்திருந்தார்கள். நான் சென்ற பொழுது நிலத்தில் காலை வைத்தால் வெட்டி விடுவோம் என்று மிரட்டினார்கள். அதை பொறுத்து பிரம்மதேசம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம்.

4. எனது மனைவியின் தம்பி மற்றும் தம்பி மனைவி ஆகியோர்களை பிடித்து வைத்துக்கொண்டு பணம் கொடுத்தால்தான் விடுவேன் என்று காத்தவராயன் மற்றும் சங்கர் ஆகியோர்கள் மிரட்டினார்கள் அதனால் தான்

எனது மனைவி நிரப்பப்படாத காசோலையை கொடுத்தார். அந்த காசோலையில் எனது மனைவி கையொப்பம் மட்டும்தான் போட்டு கொடுத்தார். முன்னூரில் காத்தவராயன் வீட்டில் வைத்து கடன் வாங்கியதாக வழக்கறிஞர் அறிவிப்பில் சொல்லி உள்ள விவரம் தவறானது. அவ்வாறு எந்த பணமும் வாங்கவில்லை. 03.02.2022 தேதி கடன் கொடுத்ததாக சொல்லி உள்ளார்கள் ஆனால் அது பத்திரப்பதிவு செய்த தேதி ஆகும். காத்தவராயன் ஹிஜாவு நிறுவனத்தில் முதலில் முதலீடு செய்தது 15.04.2022 ஆம் தேதி தான். எனது மனைவி காத்தவராயன் மற்றும் சங்கர் ஆகியோர்களிடம் எந்த தொகையும் பெறவில்லை. எனது மனைவி மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனது மனைவி உயிருக்கு பயந்து தான் காசோலையை கொடுத்தார்.

(வழக்கு குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது).

//திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் மைக் மூலம் சொல்லப்படும் அதை தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண்.2, திண்டிவனம்.